# ஒரு புதிய குழுவும் –மேலானவைகளும் (15:40–16:10)

*புதிய இடம் ஒன்றில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் செல்கின்றவர்களுக்கு, ஒரு குழுவின் அங்கமாக இருப்பது மதிப்புடையதாயிருக்கும். இயேசு ஊழியக்காரர்களை அனுப்பியபோது, அவர்களை இணை இணையாக அனுப்பி வைத்தார் (மாற். 6:7). பவுல், தாம் மட்டும் தனியாக ஊழியம் செய்வதில்லை என்பதை ஒரு நியதியாகவே கொண்டிருந்தார். கடினமான இடங்களுக்குக்கூடத் தங்கள் குடும்பத்தாரையும் அழைத்துச் சென்று ஊழியம் செய்த அநேகரை நான் அறிந்திருக்கின்றேன். அவர்களின் தைரியத்தையும் ஒப்புக் கொடுத்தலையும் நான் பாராட்டினேன், ஆனாலும் பெரும் பாலும் அதன் விளைவு துன்பகரமாகவே இருந்தது: ஊழியர்கள் தைரியமிழந்து வெளியேறினார்கள், திருமண உறவுகள் பாதிக்கப்பட்டன, மற்றும் பிள்ளைகள் கர்த்தருக்குள் இராமல் இழந்து போகப்பட்டார்கள்.*

*பர்னபா மற்றும் யோவான் மாற்கு ஆகியோருடன் பவுல் தமது முதலாவது பயணத்தைத் தொடங்கிய போது, எப்பொழுதுமே ஒன்றுகூடியிருக்கப் போகின்ற ஒரு குழுவின் அங்கமாகத் தாம் இருந்ததாக அவர் நினைத்திருக்கக் கூடும். ஆயினும், மாற்கு பிரிந்து செல்லும் வரையே அது நீடித்திருந்தது (13:13). பின்பு, பவுல் இரண்டாம் பயணத்தைப் பற்றிச் சிந்தித்த போது, அவருக்கும் பர்னபாவுக்கும் "ஒரு தீவிர கருத்து மாறுபாடு" ஏற்பட்டதால் அவர்கள் தனித்தனி வழிகளில் சென்றார்கள் (15:39). பவுல் மறுபடியும் குழுவைக் கட்ட வேண்டியதாயிற்று. நீங்கள் விளையாட்டில் ஆர்வமுள்ளவராக இருந்தால், சில ஆண்டுகளுக்கு ஒரு முறை குழு ஒன்றை மறுகட்டுமானம் செய்வது அவசியம் என்பதை அறிவீர்கள்:*

உயர்நிலைப் பள்ளி மற்றும் கல்லூரியில், விளையாட்டு வீரர்கள் பட்டம் பெறுகின்றார்கள்; தொழில்/திறமை சார்ந்த அந்தஸ்து கிடைக்கையில், விளையாட்டு வீரர்கள் மற்ற குழுக்களுக்குச் செல்கின்றார்கள் அல்லது ஓய்வு பெறுகின்றார்கள். இவ்விதம் செல்லுகின்றவர்களுக்குப் பதிலாக தரமான விளையாட்டு வீரர்களை நியமிப்பது கடினம் என்பதையும் நீங்கள் அறிவீர் கள். பவுல் மேற்கொண்ட மறுகட்டுமான முயற்சியானது விளையாட்டுக் குழுவொன்றை மறுகட்டுமானம் செய்வதைக் காட்டிலும் மிகவும் முக்கியமானதாக இருந்தது; சரியான நபர்களை அவர் கண்டுபிடிக்க வேண்டியதாய் இருந்தது, அல்லது கர்த்தருடைய ஊழியம் பாதிக்கப்படும்! அவர் மிகவும் கடினமான பணியை எதிர் கொண்டார்.

இப்பாடத்தில் நாம், பவுலின் இரண்டாம் ஊழியப் பயணத்தைப் பற்றிப் படிக்கத் தொடங்குகின்றோம். இந்தப் பயணமானது அவர் நற்செய்தி ஊழியம் செய்யும்படி கனவில் நினைத்திராத தொலை தூரப் பகுதிகளுக்கு அவரை இட்டுச் சென்றது. இந்தப் பயணத்தின் தொடக்க காலக் கட்டத்தில் பவுல் தம்முடன் ஊழியம் செய்யும் புதிய குழு ஒன்றைக் கூட்டிக் கொண்டார் - இக்குழுவில் இருந்தவர்களில் பெரும்பா லோர், அவரது எஞ்சியிருந்த வாழ்க்கை முழுவதிலும் அவருடன் கூடத் தங்கியிருப்பார்கள். அவர்கள் அவரது குழுவினர் என்பதிலும் மேலானவர்கள் ஆவார்கள்; அவர்கள் அவருக்கு நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள்.

## நம்பிக்கை வைக்க ஒருவர் (15:40, 41)

பவுலும் பர்னபாவும் பிரிந்த போது, பவுல் இரண்டாவது பயணத்தில் தம்முடன் செல்வதற்கு சீலாவைத் தேர்ந்தெடுத் தார். முந்திய பாடம் ஒன்றில் நாம் சீலாவைச் சந்தித்தோம்; அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும் (15:32), எருசலேமில் இருந்த சபையில் "விசேஷித்தவர்களில்" ஒருவராகவும் (ஒருவேளை அந்த உள்ளூர் சபையில் மூப்பராயிருந்திருக்கலாம்) இருந்தார் (15:22). எருசலேம் சபையாரின் கடிதத்தைக் கொடுக்கும் படியாக அவர் பவுல், பர்னபா இன்னும் மற்றவர்களுடன் அவர் அந்தியோகியாவுக்கு வந்திருந்தார். அந்தியோகியாவில் இருக்கையில் அவர் பிரசங்கம் மற்றும் போதனையினால்

அங்கிருந்த சகோதரர்களை ஆறுதல் படுத்திப் பெலப்படுத் தினார் (15:32). பவுல் அவருடைய திறமையினால் ஈர்க்கப் பட்டு, அவருக்குள்ளாக தம்முடையதைப் போன்ற ஆவி இருந்ததைக் கண்டார். பர்னபாவுக்குப் பதிலாக யாரை நியமிக்கலாம் என்று பவுல் பார்த்த போது, அவரது சிந்தனை சீலாவை நோக்கித் திரும்பியது.

முதலாவது பயணத்தில் நிலைநாட்டியிருந்த சபைகளை மறுபடியும் சென்று பார்ப்பது என்ற பவுலின் நோக்கத்திற்கு சீலா முற்றிலும் தகுதியானவராக இருந்தார்.[1] பவுலைப் போலவே இவரும் ஏவுதலினால் பேச முடியும், எனவே இவர் ஊழிய பாரத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும். பவுலைப் போலவே இவரும் ரோமக் குடிமகனாயிருந்தபடியால் (16:37) பவுல் அனுபவித்த அரசு உரிமைகளை அவரும் பெற்றிருந்தார். பயணத்திற்கு அவரை விசேஷித்த வகையில் ஏற்புடைய வராக்கிய தனிச் சிறப்புள்ள பண்பு ஒன்றையும் அவர் பெற்றிருந்தார்; எருசலேமிலிருந்து அனுப்பிய கடிதத்தை உள்ளூர் சபைகளுக்குக் கொடுத்தபோது (16:4) அந்தியோகியா வில் அவர் செய்தது போலவே (15:22, 27) கடிதத்தின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்த முடிந்திருந்தது.

சீலாவைக் குழுவில் சேர்த்துக் கொண்டதினால், பவுல் தமது இரண்டாம் பயணத்தை, பாரத்தை இலகுவாக்கும் அவருடன் தொடங்கினார்: "பவுலோ சீலாவைத் தெரிந்து கொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு" (வ. 40). மீண்டும் ஒருமுறை (முறைப்படியோ அல்லது முறைசாராமலோ) ஏதோ ஒரு வகையில், அந்தியோகி யாவின் சகோதரர்கள் பவுலை சபையாரின் ஆசீர்வாதங் களுடனும், கர்த்தரின் ஆசீர்வாதங்களுடனும் வழியனுப்பி வைத்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக் கொண்டு கப்பல் ஏறிச் சீப்புரு தீவுக்குப் போனார் (வ. 39), ஆகவே பவுல் தமது முதல் பயணத்தில் செய்தது போல கப்பல் பயணத்தில் தொடங்கவில்லை. மாறாக, அவரும் சீலாவும் வடக்கு நோக்கியும் பிறகு மேற்கு நோக்கியும் பயணம் செய்து, தர்சுப் பட்டணத்தில் (கலா. 1:21) இதற்கு முன் தங்கியிருந்த பத்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டு காலத்தில் ஒருவேளை பவுல் நிலைநாட்டியிருந்த சபைகளைப் பார்வையிட்டார்கள்: "சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து சபைகளைத் திடப்படுத்

தினான்'' (வ. 41). (பவுலின் பயணங்கள் வரைபடத்தைக் காணவும்.) எருசலேமிலிருந்து கடிதமானது அங்கிருந்த சபைகளுக்கும் எழுதப்பட்டிருந்தது (வ. 23); அந்தக் கடிதமானது இதற்கு முன்பு அவர்களுக்கு அனுப்பப்படாமல் இருந்திருந்தால், இந்த வேளையில் பவுல் மற்றும் சீலா ஆகியோர் அந்தக் கடிதத்தை அவர்களிடத்தில் கொடுத்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## பயிற்சியளிக்கப்படுவதற்கு ஒருவர் (16:1-5)

சீரியாவிலும் சிலிசியாவிலும் பணி முடிந்த பிறகு, பவுலும் சீலாவும் மேற்கு முகமாய்ச் சென்றார்கள். சிலிசியாவின் தாழ்ந்த நிலப்பரப்புகளை விட்டு, அவர்கள் சிலிசியாவின் வாசல்கள் என்று அறியப்பட்டிருந்த கடப்பின் வழியாக, கரடுமுரடான தாவ்ரூஸ் என்ற மலையைக் கடந்து சென்றார்கள், பின்பு கடைசியில், பவுல் தமது முதல் பயணத்தில் ஊழியம் செய்திருந்த தெற்கு கலாத்தியாவின் சமவெளிப் பகுதியில் வந்து சேர்ந்தார்கள்: ''அதன் பின்பு அவன் தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் போனான்'' (வ. 1அ). பவுல் மேற்கிலிருந்து வருவதற்குப் பதிலாகக் கிழக்கிலிருந்து வந்ததால், தெர்பை பட்டணமானது லீஸ்திராவுக்கு முன்னதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (பவுல் தெர்பையில் ஊழியம் செய்தபோது யாரேனும் அவரிடத்தில் பர்னபாவைப் பற்றி விசாரித்தார்களா? - அப்படியானால் அவர் அதற்கு என்ன பதில் கூறினார் என்பது பற்றி நான் ஆச்சரியமடைகின்றேன்.)

பவுல் லீஸ்திராவை அடைந்தபோது,[2] “அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான்; அவன் தாய் விசுவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன்” (வ. 1ஆ). இவ்விடத்தில் நமக்கு, “அறிந்த வரையில் (பவுலுக்கு) மிகவும் நெருங்கிய சிநேகிதனாயிருந்த''[3] ''மாம்சத்தில் ஒருபோதும் பெற்றிராத, விசுவாசத்தில் பெற்ற குமாரன்''[4] என்னப்படுபவரைப் பற்றி அறிமுகம் கிடைக்கின்றது.

தீமோத்தேயுவின் தாய் “விசுவாசமுள்ள யூதப் பெண்மணி,” அவள் பெயர் ஐனிக்கேயாள் மற்றும் அவர் லோவிசாள் என்னும் பெயருள்ள, தேவபக்தி நிறைந்த பாட்டியையும்

கொண்டிருந்தார் என்று 2 தீமோ. 1:5லிருந்து நாம் அறிகின்றோம். பக்தியுள்ள இவ்விரு பெண்களும், தீமோத்தேயுவுக்குக் குழந்தைப் பிராய முதலாகவே வேதவசனத்தைப் போதித்தார்கள் (2 தீமோ. 3:15), அதன் மூலம் அவருக்குள் தேவன் மற்றும் அவரது வசனத்தின்மேல் ஆழ்ந்த ஒரு விசுவாசத்தை நிலைநாட்டினார்கள் (2 தீமோ. 1:5). பவுல் முதல்முறை லீஸ்திராவுக்கு வந்தபோது, ஐனிக்கேயாளும், லோவிசாளும் மனம் மாற்றப்பட்டார்கள்[5] - அத்துடன் இளைஞனாக இருந்த தீமோத்தேயுவும் கூட - ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்.

பெற்றோர்களும், பெற்றோர்களின் பெற்றோர்களும் ஒரு குழந்தையின் ஆவிக்குரிய நலங்களில் அக்கறை கொள்வதை முதலாவதும், முக்கியமானதுமாகக் கருதுவது அந்தக் குழந்தைக்கு எவ்வளவு ஆசீர்வாதமானதாகின்றது! சிறு குழந்தைகளையுடைய பெற்றோராக நீங்கள் இருந்தால், அவர்களை சரியான முறையில் வளர்ப்பது உங்கள் பொறுப்பு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் - அவர்களுக்கு தேவனுடைய வழியைப் போதிப்பதே கர்த்தருக்கு நீங்கள் செய்யும் மாபெரும் ஊழியம் என்பதையும் புரிந்து கொள்ளுங்கள்! தேவனுடைய ஊழியத்தில் ஐனிக்கேயாள் வேறு என்ன செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது, ஆனால் கர்த்தரால் பயன்படுத்தக் கூடிய வகையில் ஒரு சிறுவனை வளர்த்ததைக் காட்டிலும் பெரிய ஊழியம் எதுவும் கிடையாது!

ஐனிக்கேயாளும் லோவிசாளும் "[தீமோத்தேயு] நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்த ..." (நீதி. 22:6) வேண்டியதாயிருந்தது என்பதையும் குறிப்பிட வேண்டும், அதுவும் அவர்கள் தாங்களாகவே - மற்றவர்களின் சிறிதளவு உதவியுடனோ அல்லது உதவியில்லாமலோ - அதைச் செய்ய வேண்டியதாயிருந்தது. லீஸ்திராவில் ஜெப ஆலயமோ, தீமோத்தேயுவுக்குப் போதிப்பதற்கு ரபீயோ இருந்ததில்லை. மேலும், ஐனிக்கேயாள் புறஜாதியைச் சேர்ந்த ஒரு கணவனை திருமணம் செய்திருந்தாள், அவர் அவளுடன் விசுவாசத்தைப் பகிர்ந்து கொண்டதில்லை, அநேகமாக அவர் அவளது மார்க்க நடைமுறையை செயலூக்கத்துடன் எதிர்த்து நின்றிருக்கலாம்.[6] உங்களுக்குச் சிறு குழந்தைகள் இருந்து, ஐனிக்கேயாளின் இக்கட்டான நிலையில் நீங்கள் இருந்தால், தீமோத்தேயு பின்னாளில் எப்படியானார் என்று அறிந்து நீங்கள்

ஊக்கமடையுங்கள்.

நான் ஊழியம் செய்துள்ள இடங்களுக்கு அவ்வப்போது நான் திரும்பச் செல்வதுண்டு. இந்த அனுபவங்கள் யாவும் எவ்வித மாறுபாடுமின்றி என்னை கவலையிலும் சந்தோஷத்திலும் நிறைக்கின்றன: விழுந்துபோனவர்களைப் பற்றி அறியும் போது நான் கவலைப் படுவதுண்டு, ஆனால் மற்றவர்கள் ஆவிக்குரிய முறையில் அதிகம் வளர்ந்திருப்பது கண்டு ஆச்சரியம் அடைவதுண்டு. இளைஞனான தீமோத்தேயுவின் வளர்ச்சி குறித்து பவுல் இன்பம் அடைந்திருக்க வேண்டும். பதினாறுக்கு மேல் இருபந்தைந்து வயதிற்குள்ளாகவே[7] இருந்த தீமோத்தேயு அப்பொழுதே, "லீஸ்திராவிலும் இக்கோனியாவிலுமுள்ள சகோதரராலே நற்சாட்சி பெற்றவனாயிருந்தான்" (16:2). இக்கோனியம் லீஸ்திராவிலிருந்து சற்றுத் தொலைவில் இருந்தபடியினால், கர்த்தருடைய ஊழியத்தில் தீமோத்தேயு பரந்து விரிந்து செயல்பட்டிருக்க வேண்டும். ஒருவேளை அவர் பிரசங்கியார் என்ற நன்மதிப்பை ஏற்கனவே பெற்றிருக்க வேண்டும்.[8] ஒரு சந்தர்ப்பத்தில், லீஸ்திரா சபையின் மூப்பர்கள் அவர் மீது தங்கள் கைகளை வைத்து, சுவிசேஷ ஊழியத்திற்கென்று அவரைப் பிரித்து வைத்திருந்திருக்கலாம் (1 தீமோ. 4:14); ஒருவேளை அச்செயல் பவுல் அங்கு வந்து சேர்வதற்கு முன்பாகவே கூட நடந்திருக்கலாம்.

எல்லா இளம் பிரசங்கியார்கள் போலவே தீமோத்தேயுவும் கூட அப்பொழுதும் கூர் தீட்டப்பட்டுக் கொண்டிருந்தார். அத்துடன், அவர் பயந்த சுபாவமுள்ளவராகவும்,[9] அநேக விதமான உடல் வியாதிகளால் உபத்திரவப்படுபவராகவும் இருந்தார் (1 தீமோ. 5:23). எப்படியிருந்தாலும், அவருக்குள் இருந்த ஆச்சரியமான வல்லமையைக் கண்ட பவுல், அவரைத் தமது குழுவின் அங்கமாக்க விரும்பினார். பர்னபா மாற்குவினிடத்தில் மேற்கொள்ள விரும்பிய செயல்களைப் பவுல் தீமோத்தேயுவினிடத்தில் மேற்கொள்ள விரும்பினார்: இராஜ்யத்தில் மாபெரும் ஊழியத்திற்கென்று அவரைத் தயாரித்தல். ஒருவேளை தீமோத்தேயு ஒரு காலத்தில் தமது இடத்தை நிரப்ப முடியும் என்று கூட பவுல் கண்ணோட்டம் கொண்டிருக்கலாம் (2 தீமோ. 2:2).

அப். 16:3ல், "அவனைப் பவுல் தன்னுடனே கூட்டிக் கொண்டு போக வேண்டுமென்று விரும்பி" யதாகக் கூறப்

படுகின்றது. தீமோத்தேயு இன்னமும் இளைஞராக இருந்தார், அவரது தகப்பன் இறந்து போயிருந்தார், ஆகவே, தீமோத்தேயு பவுலுடன் செல்வதா வேண்டாமா என்று ஐனிக்கேயாள்தான் முடிவெடுக்க வேண்டியதாயிருந்தது. ஐனிக்கேயாள் அவரைப் பவுலுடன் செல்ல அனுமதித்த உண்மையானது அவளைப் பற்றிய நன்மதிப்பினால் என் இருதயத்தை நிரப்புகின்றது. அந்தத் தாயின் நிலையில் ஒரு கணம் உங்களை வைத்துப் பாருங்கள்: பவுலிடமிருந்து ஜீவனைப் பிழிந்தெடுக்கும்படி கூச்சலிட்ட கூட்டத்தின் சத்தத்தை இன்னமும் உங்களால் கேட்க முடிகின்றது. நீங்கள் உங்கள் கண்களை மூடிக் கொண்டால் அவரது நொறுங்கிய உடல் இரத்தத்தால் மூடப் பட்டிருப்பதை இன்னமும் காண முடிகின்றது. வேட்டை யாடப்படும் விலங்கு போலப் பெரும்பாலும் வாழும் இந்த மனிதர் உங்களிடத்தில் வந்து, இப்போது, "உங்கள் மகன் என்னுடன் வந்து எனது வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும்படி நான் விரும்புகின்றேன்" என்று கூறுகின்றார். நீங்கள் அதற்கு என்ன சொல்லியிருப்பீர்கள்? அநேகத் தாய்மார்கள் இதற்கு என்ன கூறியிருப்பார்கள் என்பதை நான் அறிவேன். வரை முறைக்குட்பட்ட எனது அனுபவத்தில், ஆண்களும் பெண் களும் ஊழியக்களத்திற்குப் போவது பற்றித் தங்கள் மனதை மாற்றிக் கொள்வதற்கு முதல் காரணம், அவர்களின் தாய் மார்கள் கண்ணீர் நிரம்பிய விழிகளுடன், "தயவு செய்து என்னை விட்டுப்போகாதே! இவ்வளவு தூரம் நீ பிரிந்து போவதை என்னால் தாங்க முடியாது" என்று கூறுவதேயாகும் அல்லது, "தயவு செய்து எனது பேரக் குழந்தைகளை நான் இழக்கும்படி செய்ய வேண்டாம்!" என்று கூறுவதேயாகும். வெகுவாக தாக்குதலுக்குள்ளான சுவிசேஷ ஊழியக்காரர் ஒருவர் இந்தத் தாய்மார்களிடம் வந்து, "உன் மகன் என்னு டன் வந்து பாடுபட வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்" என்று கேட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? கர்த்த ருடைய ஊழியத்திற்கென்று தங்கள் பிள்ளைகளை அனுப்பு கின்ற பெற்றோர்களைத் தேவன் ஆசீர்வதிக்கின்றார். "நான் உன்னை என்னுடன் வைத்துக் கொள்ளத்தான் விரும்பு கின்றேன், ஆனால் எனது சுயவிருப்பங்களைவிட தேவனு டைய ஊழியம் மிகவும் முக்கியமானது. பெற்றோர் என்ற முறையில் உன்னைப் பற்றிக் கவலைப்பட எனக்கு உரிமை

*யுள்ளது - ஆனால் தேவன் உன்னைக் கவனித்துக் கொள்வார் என்று நான் நம்புகின்றேன். எனது ஆசீர்வாதங்களுடன் செல்" என்று ஐனிக்கேயாளுடன் இணைந்து இன்றைக்கு யார் கூறுவார்கள்?*

*தீமோத்தேயு அக்குழுவுடன் சேர்ந்து கொண்டார்; இருவர் மூவராயினர். இதன் பின்பு பவுல் திகைப்படையப் பண்ணும், ஏறக்குறைய அதிர்ச்சியடையப் பண்ணும் ஒரு செயலைச் செய்தார்: "அவனுடைய தகப்பன் கிரேக்கன்*[10] *என்று அவ்விடங்களிலிருக்கும் யூதர்களெல்லாரும் அறிந்திருந்த படியால், அவர்கள் நிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான்" (வ. 3ஆ). ஒரு மனிதர் கிறிஸ்தவராக வேண்டுமானால் அவர் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்று கூறிய யூதமத போதகர்களை எதிர்த்து நின்ற அதே பவுல் தானா இவர் (15:2)? எருசலேமின் கூட்டத்திற்குச் சென்றபோது தீத்துவுக்கு விருத்தசேதனம் செய்விக்க மறுத்து நின்ற அதே பவுல் தானா இவர் (கலா. 2:3)? கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில், "இதோ, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக் கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமு மிராது" என்று எழுதிய அதே பவுல் தானா இவர் (கலா. 5:2)? விருத்தசேதனமானது கிறிஸ்தவர்களைக் கட்டுப்படுத்து வதில்லை என்ற ஒரு கடிதத்தை எருசலேமின் சபையிலிருந்து மற்ற சபைகளுக்கு அறிவிக்கும்படி எடுத்துச் சென்ற அதே பவுல் தானா இவர் (16:4)?*

*பவுல், தீத்துவை விருத்தசேதனம் பண்ண அனுமதிக்காதது ஏன் என்பதையும், தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டியது முக்கியம் என்று நம்பியது ஏன் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்விரு நிகழ்ச்சிகளுக்கும் இடையில் இருந்த வேறுபாடுகளைக் கவனியுங்கள். முதலில் நாம் தீத்துவைப் பற்றிக் கவனிப்போம்: தீத்து ஒரு புறஜாதி யாராய் இருந்தார் (கலா. 2:3), மற்றும் யூதமத போதகர்கள், தீத்து இரட்சிக்கப்படுவதற்கு விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள் (அப். 15:1). பவுல் தீத்துவை விருத்தசேதனம் செய்து கொள்ளும்படி அனு மதித்தால் அது தவறானதைப் போதிக்கும் போதகர்களின் நிலைப்பாடு சரியென்று ஒப்புக் கொள்வது போல இருக்கும் - அதைப் பவுல் அனுமதிக்க முடியாது. கொள்கையின் அடிப்*

படையில் பவுல், தீத்துவை விருத்தசேதனம் பண்ணும்படிக்கு அனுமதிக்கவில்லை.

இதற்கு மறுபுறத்தில், தீமோத்தேயு யூதப் பின்னணியுடையவராயிருந்தார் (16:1), அவரது இரட்சிப்பின் விஷயம் பற்றிக் கேள்வி எழுப்பப்படவில்லை. பவுல் ஏன் அவருக்கு விருத்தசேதனம் செய்வித்தார் என்று நமது வேதபாட பகுதி நமக்குக் கூறுகின்றது: "... அவனுடைய தகப்பன் கிரேக்கன் என்று அவ்விடங்களிலிருக்கும் யூதர்களெல்லாரும் அறிந்திருந்தபடியால் ..." (16:3). தீமோத்தேயுவின் தாய் ஒரு யூதப் பெண்ணாய் இருந்தபடியினால், தீமோத்தேயு ஒரு யூதர் என்றே யூதமக்களால் கருதப்பட்டார் - ஆனால் அவர் விருத்தசேதனம் இல்லாதிருந்ததால், நுணுக்கமான விதத்தில் அவர் மார்க்கத்திலிருந்து விலகிய யூதராய் இருந்தார். நாம் கண்டிருக்கிறபடி, பவுல் ஒரு புதிய பட்டணத்திற்குச் செல்லும் போது, அந்தப் பட்டணத்தில் ஜெப ஆலயம் இருந்தால், அங்கு தான் அவர் தமது ஊழியத்தைத் தொடங்கினார். ஆயினும், தீமோத்தேயு விருத்தசேதனம் செய்விக்கப்படாதிருந்தால், அவர் ஜெபஆலயத்தில் அனுமதிக்கப்படமாட்டார். மற்றும், தீமோத்தேயுவின் மார்க்க விலக்கத்தைப் பவுல் ஆதரித்திருந்தார் என்பதாக யூதர்கள் எண்ணினால், அவரையும் கூட ஜெப ஆலயத்தில் அனுமதிக்க மாட்டார்கள். நலம் தரும் அடிப்படையில் பவுல், தீமோத்தேயுவை விருத்தசேதனம் பண்ணும்படிக்கு அனுமதித்தார்.[11] "தீமோத்தேயுவின் விருத்தசேதனமானது நடைமுறை நோக்கங்களுக்காகச் செய்யப்பட்ட ஒரு சிறு அறுவைச் சிகிச்சையாகவே இருந்தது - இது சுவிசேஷ ஊழியத்தில் அவர் மாபெரும் பயன்பாடுள்ளவராயிருப்பதற்கு உதவிற்று" என F.F. Bruce கூறுகிறார்.

அப். 16:3 வசனமானது 1 கொரிந்தியர் 9ல் பவுல் கூறிய கூற்றிற்கான ஒரு நடைமுறை விளக்கமாகும்:

> நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத் தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். யூதரை ஆதாயப் படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப் போலவும் ... எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன் (1 கொரி. 9:19-22).

*அப். 16 மற்றும் 1 கொரிந்தியர் 9 ஆகிய அதிகாரங்களில் மிகவும் முக்கியமான ஒரு கொள்கை காணப்படுகின்றது: சுவிசேஷத்துடன் நாம் மக்களை அடைய முயற்சி செய்கின்ற போது, சத்தியத்திற்குப் பங்கம் ஏற்படாத வகையில் அவர்களின் மன உணர்வுகளைப் புண்படுத்தக் கூடிய செயல்களைச் செய்யாமல் நம்மை நாம் காத்துக் கொள்ள வேண்டும். தீத்துவுக்கு விருத்தசேதனம் பண்ணப்பட்டிருந்தால், அது சத்தியத்திற்குப் பங்கத்தை உண்டாக்கியிருக்கும். தீமோத்தேயுவின் விருத்த சேதனமானது சத்தியத்திற்குப் பங்கம் ஏற்படுத்தவில்லை, ஆனால் அது ஒரு களங்கத்தை நீக்கியது.*

*தற்காலத்திய விளக்கங்கள் ஏராளமாய்ப் பெருக்கப் படலாம். நாங்கள் ஆஸ்திரேலியாவில் ஊழியம் செய்து கொண்டிருந்தபோது, அமெரிக்காவில் பொதுவான வழக்கில் இருந்த அநேக சொற்கள் ஆஸ்திரேலியாவில் ஆபாசமானவைகளாய் இல்லாதிருப்பினும், பண்பற்றவையாகக் கருதப் பட்டன என்று அறிந்தோம். நாங்கள் போதிக்க அணுகியவர் களிடத்தில் அவர்களின் மனம் புண்படாதிருப்பதற்காக அவ்வார்த்தைகளைப் பயன்படுத்தாமல் இருக்க முயற்சி செய்தோம். அநேக நாடுகளில், ஒருவர் வீட்டுக்குள் நுழையு முன்பு தமது மிதியடிகளைக் கழற்றி வைப்பதென்பது ஒரு வழக்கமாக உள்ளது. அவ்வாறு செய்யத் தவறினால் அது அவ்வீட்டாரை அவமதிப்பது என்று கருதப்படுகின்றது. சில நாடுகளில், இடது கையினால் பொருள்களை ஒருவருக்குக் கொடுப்பதென்பது மனதைப் புண்படுத்தக் கூடிய செயலாகும். அந்த நாடுகளில் உள்ள ஊழியக்காரர்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்களை அணுக முயற்சி செய்தால், அவர்களின் வழக்கப் படியே தாங்களும் இடது கையை அவ்விதம் பயன்படுத்தாமல் இருக்கும்படி பயிற்சி செய்து கொள்ள வேண்டும். இவ்விஷயங்கள் எதுவும் சத்தியத்திற்குப் பங்கம் ஏற்படுத்துவதில்லை. நமக்கும், சுவிசேஷத்தினால் நாம் அணுக முயற்சிப்பவர் களுக்கும் இடையில் உள்ள தேவையற்ற தடைகளை அகற்றுவதற்கே இவைகளைச் செய்வது அவசியமாகின்றது.*

*ஆயினும் சத்தியத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ள ஒரு உள்ளூர் வழக்கத்தை ஏற்பதா அல்லது மறுப்பதா என்பது எப்பொழுதும் சுலபமானதாய் இருப்பதில்லை. "எப்பொழுது உறுதியாய் நிற்பது, எப்பொழுது இணங்கிச்*

செல்லுவது என்பதை அறிந்தவர்களே ஆவிக்குரிய வகையில் ஞானமுள்ள முன்னோடிகளாய் இருக்கின்றார்கள்'' என்று வாரன் வயர்ஸ்ப் கூறுகிறார். இது பற்றிய ஒரு கடினமான முடிவை நீங்கள் எதிர்கொள்ளும் போது, நீங்கள் தேவனிடத்தில் ஞானத்திற்காய் ஜெபிக்க விரும்புவீர்கள் (யாக். 1:5) மற்றும் விசுவாசத்தில் பக்குவம் பெற்ற, அதிக ஞானமுள்ள ஒருவரிடத்தில் இதைப் பற்றிப் பேசவும் நீங்கள் விரும்புவீர்கள் (நீதி. 11:14).

தீமோத்தேயுவின் விருத்தசேதனம் பற்றிய இவ்விஷயத்தை முடிக்கும் முன்னர், அந்த இளைஞனின் இணக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டேயாக வேண்டும். விருத்தசேதனம் என்பது "ஒரு சிறிய அறுவைச் சிகிச்சையாய்'' இருக்கலாம், ஆனால் அது அப்பொழுதும் வலி மிகுந்ததாகவே இருந்தது - மிகவும் சங்கடப் படுத்தக் கூடியதாக இருந்தது. தீமோத்தேயு இன்றைய நாட்களில் உள்ள சில இளைஞர்களைப் போல இருந்திருந் தால், அவர், "என்னை இப்படிச் செய்து கொள்ளும்படி யாரும் எதுவும் செய்ய முடியாது" என்றோ அல்லது "நான் விருத்த சேதனம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறும் வேதவசனத் தைக் காட்டுங்கள்" என்றோ கூறியிருக்கக் கூடும்! தீமோத்தேயு தம்மை அந்த வலி மிகுந்த சங்கடமான சூழ்நிலைக்கு ஒப்புக் கொடுக்க வேண்டியதில்லை, ஆனால் அவர் அதைத் தெரிவு செய்து கொண்டார். அவர் ஏன் தம்மை விருத்தசேதனம் செய்விக்க அனுமதித்தார்? அது கர்த்தருடைய ஊழியத்தின் நன்மைக்காகவும், நல்லதொரு மதிப்பைப் பெறுவதற்காகவுமே. முரட்டாட்டமும், தங்கள் உடையணியும் பழக்கம் மற்றும் நாணமற்ற நடத்தையினால் தங்கள் குடும்பங்களையும் சபையையும் சங்கடப்படுத்தும் இளைஞர்கள், தீமோத்தேயு என்ற இளைஞனிடத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ள முடியும்.

தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணுவித்தவுட னேயே, பவுல் தம்மால் முடியாத போது தமது ஊழியத்தைத் தொடர்ந்து செய்யப் பயிற்சியளிப்பதற்கு ஒரு இளைஞரைப் பெற்றிருந்த கூடுதல் அனுகூலத்துடன் தமது பயணத்தைத் தொடங்க ஆயத்தமானார். கர்த்தருக்கு ஊழியம் செய்ய இளைஞர்களைப் பயிற்றுவிப்பதைக் காட்டிலும் அதிகமான முக்கிய ஊழியங்கள் வெகு சிலவே உள்ளன என்று நான்

*அறிகின்றேன்-ஊழியப்பயிற்சியில் நேருக்கு நேர் பயிற்சியளித் தலைவிட பயனுள்ள வழிகள் ஒரு சிலவே உள்ளன என்பதையும் நான் அறிந்துள்ளேன். நீங்கள் ஆராதிக்குமிடத் தைச் சுற்றிலும் பாருங்கள். கர்த்தருடைய ஊழியத்தில் இளைஞர் ஒருவரை உங்களால் உற்சாகப்படுத்த முடியுமா? யாரேனும் ஒருவருக்கு நீங்கள் பயிற்சியளிக்க முடியுமா? எஜமானுக்கு ஊழியம் செய்கையில் யாரேனும் ஒருவரை நீங்கள் அழைத்துச் செல்ல முடியுமா? இராஜாவுக்கான உங்கள் ஊழியத்தில் இது ஒன்றுதான் எப்பொழுதும் தனிச்சிறப்புள்ள தாக இருக்கும்.*

*அந்தக் குழு புறப்பட வேண்டிய வேளை நெருங்கியது. ஒருவேளை இந்த நேரத்தில் லீஸ்திரா சபையின் மூப்பர்கள் தங்கள் கைகளை தீமோத்தேயுவின் மீது வைத்திருக்கலாம் (1 தீமோ. 4:14). ஒரு குறிப்பிட்ட வேளையில் பவுலும் கூட அவர் மீது கைகளை வைத்தார் (2 தீமோ. 1:6), இது அவருக்கு அற்புத வரங்களைக் கொடுப்பதற்காகவே என்பதில் சந்தேக மில்லை. ஒருவேளை மூப்பர்களும், பவுலும் இணைந்து, தீமோத்தேயுவை ஊழியத்திற்கென்று பிரித்து, அந்த ஊழியத்திற்கென்று ஆயத்தப்படுத்துவதற்காக ஆராதனை யொன்றை செய்திருக்கலாம். அந்த விடைபெறும் காட்சியை எனது மனதில் நான் சித்தரிக்க முடிகின்றது - இளம் தீமோத்தேயு கண்ணீரை அடக்கிக் கொண்டு, தனது தாயின் அரவணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, லீஸ்திராவில் இருந்த சகோதரர்களிடத்தில் கையசைத்து விடை பெற்றுக்கொண்டு, அறியப்படாத எதிர்காலத்தை நோக்கிப் புழுதி நிறைந்த சாலையில் பவுலையும் சீலாவையும் பின் தொடர்ந்து சென்றார்!*

*அந்த மனிதர்கள் வடக்கிலும் பிறகு மேற்கிலும் பயணம் செய்து - இக்கோனியா, பிசீதியாவின் அந்தியோகியா மற்றும் ஒருவேளை அங்கிருந்த மற்ற சில இடங்களில் - முதல் பயணத்தில் நிலைநாட்டியிருந்த சபைகளைப் பார்த்தார்கள். "அவர்கள் பட்டணங்கள்தோறும் போகையில், எருசலேமி லிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்பு வித்தார்கள்" (16:4). இவ்வசனத்தில் உள்ள "அவர்கள்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். 15:40 முதல் 16:3 வரையிலும் -*

பவுலின் ஊழியத்தை முக்கியத்துவப்படுத்தும்படியாக - "அவன்" என்ற ஒருமை வார்த்தை பயன்படுத்தப்பட்டது. ஆயினும் 16:4ல் "அவர்கள்" சட்டங்களை ஒப்புவித்தார்கள் என்று வலியுறுத்தப்படுகின்றது: இந்தக் கட்டளைகள் எருசலேமின் அப்போஸ்தலர்களால் உண்டானதை உறுதிப்படுத்தல் என்ற தமக்குரிய தனிச்சிறப்பான நோக்கத்தை சீலா நிறைவேற்றினார்.

பவுலைப் பட்டணத்தை விட்டுத் துரத்திய மற்றும் குடிமக்கள் அவரைக் கல்லெறிந்து கொல்ல முயற்சி செய்த பகுதிகள் யாவற்றுக்கும் அவர்கள் சென்றார்கள். ஆயினும் இந்த முறை இவ்வூழியர்கள் சமாதானமாய் ஊழியம் செய்தார்கள் என்று காணப்படுகின்றது - தேவன் அவர்களின் ஊழியத்தை ஆசீர்வதித்தார். "அதனாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு,[12] நாளுக்கு நாள் பெருகின" (16:5).

## திருப்பிச் செலுத்துவதற்கு ஒருவர் (16:6-11)

பிரிகியாவிலும் கலாத்தியாவிலும் ஊழியத்தில் பெற்ற வெற்றியினால் ஊக்கப்படுத்தப்பட்ட பவுல் சுவிசேஷ விதையை விதைப்பதற்குப் புதிய பகுதிகளைக் காண ஆவல் கொண்டார். அவர்கள் இருந்த இடத்திற்கு மேற்கில் ஆசியா[13] இருந்தது, இது ரோம ராஜ்யத்தின் கிழக்குப் பகுதியில் மிகவும் வளம் நிறைந்த ஒரு மாகாணமாய் இருந்தது. பவுலும் அவருடன் இருந்தவர்களும், "கிழக்கிலிருந்தவர்கள் நோக்கிப் பார்த்த மேற்குப் பகுதியாகிய" ஆசியாவின் மையப்பகுதியில் இருந்த எபேசு[14] என்ற பட்டணத்திற்குச் செல்லத் தயாரானார்கள். ஆனால் தேவன் அவர்களைத் தடை செய்து அவர்களின் பயணத்தை வேறு திசையில் திருப்பியது அவர்களை ஆச்சரியப்படுத்திற்று. "அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்து போனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப்பட்டு" (வ. 6). பரிசுத்த ஆவியானவர் தமது செய்தியை எப்படிக் கூறினார் என்று நாம் அறிவதில்லை (ஒருவேளை இது தீர்க்கதரிசனம் உரைத்தல் மூலம் நடந்திருக்கலாம் [அப். 20:23; 21:4, 10, 11]), ஆனால் தேவன் அவர்களின் மனங்களில் எவ்வித சந்தேகத்தையும் விட்டு வைக்கவில்லை: இந்த சமயம் அவர்கள்

*ஆசியாவுக்குச் செல்லக் கூடாதிருந்தது.*[15]

*அவர்கள் மீசியா பகுதிக்கு வந்தபோது, ரோம மாகாணத்தில் ஐசுவரியமாயிருந்ததும், முக்கியமானதுமான பித்தினியாவுக்குச் செல்ல வடக்கு முகமாய்ப் பயணம் செய்ய முடிவு செய்தார்கள்; ஆனால் அதுவும் கர்த்தருடைய திட்டமாய் இருக்க வில்லை. "மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ, அவர்களைப் போகவொட்டாதிருந்தார்" (வ. 7).* ASV *யில் இவ்வசனத்தில் "இயேசுவின் ஆவி" என்றுள்ளது, இது வசனம் 6ல் குறிப்பிட்டுள்ள பரிசுத்த ஆவியானவர் என்பதற்கு ஒப்பான சொல்லாகவே* KJV*யிலும் தமிழ் மொழிபெயர்ப்பிலும் காணப்படுகின்றது. இத்தனிச் சிறப்புள்ள சொற்றொடரானது இயேசுவே தமது பிரதான கட்டளை நிறைவேற்றப் படுதலில் முக்கியமான நேரடிப்பங்கு வகித்தார் என்று வலியுறுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்!*

*அவர்கள் தெற்கு முகமாய் ஆசியாவுக்குள் செல்ல முடியாதிருந்தது; அவர்கள் வடக்கு முகமாய்ப் பித்தினியாவுக்குள்ளும் செல்ல முடியாதிருந்தது. தோல்வியென்று நினைத்து அவர்கள் திரும்பிப் போகாதிருந்தால் அவர்களால் மேற்கு முகமாக மட்டுமே செல்லக்கூடுமானதாய் இருந்தது. அவர்கள் திகைப்படைந்து, குழம்பிப் போய், பழங்காலத் துரோவாவின் சிதிலங்களில் இருந்து சில மைல்கள் தள்ளியிருந்த ரோமக் குடியேற்றமும், சுறுசுறுப்பான துறைமுகமும் கொண்ட துரோவா பட்டணத்திற்கு வந்து சேர்ந்தார்கள் (வ. 8). அவர்கள் படுக்கைக்குச் செல்லுகையில் அவர்களின் சிந்தனையில் கேள்விகள் சுற்றிச் சுழன்றிருக்கும் என்று நான் கற்பனை செய்கின்றேன், ஆனால் அவர்களுக்கு இரவிலே தேவன் பதில் தந்தார்.*

> *அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்து நின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது. அந்தத் தரிசனத்தை அவன் கண்ட போது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம் பண்ணி (வ. 9, 10).*

*புகழ் பெற்ற இந்த "மக்கெதோனிய அழைப்பை" கொண்டு நாம் அடுத்த பாடத்தைத் தொடங்குவோம் - மற்றும் புத்தம் புதிய கண்டமொன்று கர்த்தருடைய சுவிசேஷத்திற்குத் திறக்கப்பட்டதை அதில் காணுவோம். ஆயினும், ஒரு சிறு பொழுது வசனம் 10ல் உள்ள இரண்டு வார்த்தைகளின்மேல் கவனம் செலுத்த நான் விரும்புகின்றேன்: "கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக் கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்தனம் பண்ணி.'' அப். நடபடிகள் புத்தகத்தை எழுதியவரான மருத்துவர் லூக்கா அவர்கள், தம்மை இந்த வரலாற்றில் அறிமுகப்படுத்திக் கொள்வதற்காக இவ்விடத்தில் இரண்டு தன்மைப் பிரதிப் பெயர்ச் சொற்களைப் பயன்படுத்தினார். பவுல் தம் குழுவின் நான்காவது உறுப்பினரைத் துரோவாவில் கண்டார்.*

*பவுல் எவ்விதம் லூக்காவைச் சந்தித்தார்? பவுலும் தீமோத்தேயுவும் (தங்களுக்கிருந்த சில நோய்களினிமித்தம்) ஒரு மருத்துவரைக் காணச் சென்றிருப்பார்கள் என்பதே இவ்விடத்தில் இயல்பான விளக்கமாய் அமைகின்றது, அவ்வேளையில் அவர்கள் லூக்காவைக் கண்டார்கள். அது எப்படி நடந்திருந்தாலும், தேவனுடைய அருளிரக்கத்தினால், பவுல் தமது குழுவின் மதிப்புயர்ந்த இன்னொரு உறுப்பினராக மட்டுமின்றி, தமது நெருங்கிய சொந்த நண்பராகவும் இருக்கப் போகின்றவரைக் கண்டார்.*

*லூக்காவைப் பற்றி நாம் அதிகம் கூற முடியும். இந்தப் பிரசங்கத் தொடர்களின் முன்னுரையில் குறிப்பிட்டபடி, அவர் ஒரு புறஜாதியாராய் இருந்தார் - அநேகமாய் அவர் பாரம் பரியத்தின்படி அந்தியோகியாவிலிருந்து வந்த ஒரு கிரேக்கராய் இருந்திருக்கலாம் (கொலோ. 4:10, 11, 14) - அவர் இயேசுவின் வாழ்வைக் கண்ணால் கண்ட சாட்சியாய் இருக்கவில்லை (லூக்கா 1:2). அவர் கற்றறிந்த புத்திக் கூர்மையுள்ள ஒரு மனிதராகவும், மருத்துவராகப் பயிற்சி பெற்றவராகவும் (கொலோ. 4:14) இருந்தார்; பவுல் தமது கைகளை அவர் மேல் வைத்த பிறகு, லூக்கா ஏவப்பட்ட ஒரு மனிதரானார். பவுலின் பயணக்கூட்டாளி என்ற வகையில் அவர் ஒரு வீரமுள்ள தோழனாகவும், சபையை கட்டி எழுப்புவதில் தம்மை ஒப்புக் கொடுத்தவராகவும், உண்மையுள்ள ஒரு நண்பனாகவும்*

*தம்மை மெய்ப்பித்துக் காண்பித்தார் (பிலே. 24; 2 தீமோ. 4:11).*

*இந்த சமயத்தில் நான் லூக்காவின் இரண்டு பொறுப்புக் களை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன்: அவர் பவுலின் சொந்த மருத்துவராகவும், உண்மையுள்ள நண்பராகவும் ஆனார். 2 கொரிந்தியர் நிருபத்தில் பவுல் தம்முடைய மனவருத் தங்களையும் ("எல்லா சபைகளைக் குறித்தும் உண்டாயிருக்கிற கவலை'' ''நாள் தோறும் நெருக்குகிறது'' [11:28]) சரீர வருத்தங்களையும் (அவரை பலவீனப்படுத்திய ''அவரது சரீரத்தின் முள்" [12:7-9]) பற்றிப் பேசினார். "பவுலை இயக்கிய மனிதர் லூக்கா'' என்று நான் எண்ணுகின்றேன். உங்களை இயக்க யாரேனும் இருக்கின்றார்களா? இருப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். மிக முக்கியமாக, நீங்கள் மற்றவர்களை இயக்கக் கூடியவர்களாய் இருக்கின்றீர்களா? லூக்காவைப் போல நீங்களும் மற்றவர்களைப் பெலப்படுத்தி ஆதரவு தருவதிலேயே உங்களின் மாபெரும் ஊழியம் புறப்படுகிற தென்று காணலாம். பவுலும் அவர் தோழர்களும் துரோவாவில் இருந்து புறப்பட்டபோது, மூன்று பேர் நான்கு பேராயினர். பவுலின் "கனவுக் குழு"[16] நிறைவு பெற்றது.*

## முடிவுரை

*ஒரு தீர்க்கதரிசி, ஒரு பிரசங்கியார், ஒரு வைத்தியர்: இம்மனிதர்கள் பல தரப்பினராயிருந்த ஒரு குழுவினராயிருந் தார்கள் ஆனாலும் ஒரு பொதுவான காரணத்திற்காகத் தங்களை அவர்கள் எல்லாரும் ஒப்புக் கொடுத்திருந்தார்கள். பின்தொடரும் பாடத்தில், இப்பொழுது நாம் ஐரோப்பா என்று அழைக்கும் கண்டத்தில் இவர்களின் சாதனைகளைப் பற்றி நாம் அனுபவித்து உணர்வோம்.*

*நீங்கள், நம்பிக்கை வைக்க ஒருவரையும், பயிற்சியளிப் பதற்கு ஒருவரையும், திருப்பிச் செலுத்துவதற்கு ஒருவரையும் பெற்றிருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். நம்மில் பலர் இவைகளில் முதல் மற்றும் கடைசி வகையானவர்களை நமது கிறிஸ்தவத் தோழர்களிலும், நடுவகையில் அமைந்தவர் களை நமது பிள்ளைகளிலும் பெற்றிருக்கின்றோம். உங்கள் சூழ்நிலை இப்படியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், நீங்கள் மற்றவர்களுடன் குழுவாக இணைந்து, நீங்கள்*

பெற்றிருக்கும் உறுதிப்பாடு மற்றும் அக்கறை ஆகியவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்படி உங்களை உற்சாகப் படுத்துகின்றேன்.

> ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் ... ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான். ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே ... ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது (பிரசங்கி 4:9-12).

## பிரசங்கக் குறிப்புகள்

"பொதுவில் நட்புறவு" என்ற பாடத்திற்கேற்ப இதில் உள்ளவைகள் தழுவியமைக்கப்படலாம். நட்புறவு என்பதற் கான கருத்துக்களை "யோனத்தான்: அவசியமான நேரத்தில் நண்பனாய் இருந்தவர்" என்ற எனது பாடத்தில் (இன்றைக் கான சத்தியம், பெப்ரவரி 1994 ஆங்கில இதழ்) காணவும்.

சீலா, தீமோத்தேயு மற்றும் லூக்கா ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் பற்றிய பாடத்தைக் கற்றுக் கொள்ள நீங்கள் ஆர்வமாய் இருக்கலாம். சீலாவைப் பற்றிய கூடுதல் தகவல்கள் அடிக்குறிப்புகளில் காண முடியும். தீமோத்தேயுவைப் பற்றிய அதிகமான தகவல்கள் அப். நடபடிகள் பற்றிய நமது எஞ்சி யுள்ள பாடங்களில் காணப்படும். பின்வரும் வசனக்குறிப்புக் களைக் கூட நீங்கள் ஆய்வு செய்ய விரும்புவீர்கள்: ரோமர் 16:21; 1 கொரி. 4:17; 16:10, 11; 2 கொரி. 1:1, 19; பிலி. 1:1; 2:19-23; கொலோ. 1:1; 1 தெச. 1:1; 3:2, 5, 6; பிலே. 1; எபி. 13:23; மற்றும் 1 மற்றும் 2 தீமோத்தேயு நிருபங்கள் முழுவதும் (விசேஷமாக 1 தீமோ. 1:18; 4:12; 2 தீமோ. 1:2-4, 6; 4:9, 13). லூக்காவைக் குறித்த நல்லதொரு தகவல் மூலமானது "அப். நட. 1"ம் பாகத்தில் அறிமுகப்பகுதிகளில் உள்ளது. லூக்காவைப் பற்றிய எல்லா விபரங்களையும் நீங்கள் இன்னும் பயன்படுத்த வில்லையென்றால், அதைப் பயன்படுத்துவதற்கு இதுவே ஏற்ற நேரம் ஆகும்.

குறிப்புகள்

[1]பவுலின் இரண்டாம் பயணம் முழுவதிலும் சீலா அவருடன் ஊழியம் செய்து உபத்திரவமும் பட்டார் (16:19, 25, 29; 17:4, 10, 14, 15; 18:5). 2 கொரி. 1:19 வசனமானது கொரிந்துவில் அவரது ஊழியம் பற்றிக் குறிப்பிடுகின்றது ("சில்வானு" என்பது அவரது பெயரின் இன்னொரு வடிவம் ஆகும்). கொரிந்துவிலிருந்து பவுல் தெசலோனிக்கேயருக்கு அனுப்பிய இரண்டு நிருபங்களையும் அப்போஸ்தலராகிய பவுலுக்காக சீலா எழுதியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது (1 தெச. 1:1; 2 தெச. 1:1). இரண்டாம் பயணத்திற்குப் பிறகு பவுலுடன் சீலாவுக்கு இருந்த தொடர்பு பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை. பின்னாளில் இவர் பேதுருவின் உடன் ஊழியராகி பேதுருவின் முதலாம் நிருபத்திற்கு எழுத்தாளராகப் பணியாற்றினாரா என்பது பற்றியும் (1 பேது. 5:12) நாம் தெளிவாக அறிவதில்லை. [2]வசனம் 1ஐ மட்டும் கவனித்துப் பார்த்தால் தீமோத்தேயு ("அங்கே" என்பது இயற்கையாகவே லீஸ்திராவைக் குறிப்பிட்டாலும்) தெர்பை அல்லது லீஸ்திராவைச் சேர்ந்தவராயிருக்கலாம் என்று எண்ணுகின்றோம். ஆயினும், வசனம் 2ஐயும் கவனிக்கும் போது, அவர் லீஸ்திராவைச் சேர்ந்தவர்தான் என்று உறுதியாய் நம்பலாம் ஏனென்றால் இவ்வசனத்தில் லீஸ்திராவும், இக்கோனியமும் மட்டுமே குறிப்பிடப் படுகின்றன. (தீமோத்தேயு தெர்பையிலிருந்தவராயிருந்தால், அவர் லீஸ்திரா மற்றும் இக்கோனியாவில் இருந்த சகோதரராலே நற்சாட்சி பெற்றிருந்தும், சொந்த ஊரில் நற்சாட்சி பெறாதவர் என்ற பொருத்தமற்ற சூழ்நிலை ஏற்படுமே.) [3]J.W. McGarvey, *New Commentary on Acts of Apostles*, vol. 2 (Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d.), 48. [4]Ken R. Durham, "Scenes in Philippi", *Acts, the Spreading Flame* (Searcy, Ark.: Harding University, 1989), 187. [5]ஐனிக்கேயாளைப் போலவே லோவிசாளும் கிறிஸ்தவளாக மாறியதாகப் பவுல் எவ்விடத்திலும் குறிப்பாய்த் தெரிவிக்கவில்லை, ஆனால் இக்கருத்து 2 தீமோத்தேயு 1:5ல் மறைமுகமாய் உள்ளது. [6]வேதவசனங்களின்மேல் உயர்ந்த அன்பு கொண்டிருந்தவர்களாக லோவிசாளும் ஐனிக்கேயாளும் பவுலினால் சித்தரிக்கப் படுவதால், தீமோத்தேயு விருத்தசேதனம் பண்ணப்படாதிருந்தமைக்கு அவர் தகப்பன் விதித்திருந்த தடையே காரணம் என்பதே ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு விளக்கமாகும். அந்த நாட்களில் மனைவிகள் தங்கள் விருப்பப்படி நடக்க முடியாது, கணவர்கள் கட்டளையிடுவதை மட்டுமே அவர்கள் செய்ய முடியும். [7]McGarvey அவர்களின் மதிப்பீடு சரியானதென்றால், பவுல் திரும்பி வந்தபோது தீமோத்தேயு ஏறக்குறைய பதினெட்டு வயதுடையவராயிருந்திருப்பார். [8]நான் எனது 17ஆவது வயதில் பிரசங்கிக்கத் தொடங்கினேன், எனது பதினெட்டாவது வயதில் ஒரு உள்ளூர் சபையில் வாரந்தோறும் வந்து பிரசங்கிக்கும்படி என்னிடத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது. நான் சிறுவனாக இருந்தபோது, இது ஒன்றும் அசாதாரணமானதாய் இருக்கவில்லை. ஆனால் தீமோத்தேயு வாழ்ந்த இடத்தில் இப்படி இருந்திருக்காது. [9]1 கொரிந்தியர் 16:10 மற்றும் 2 தீமோ. 1:6, 7 பயந்த சுபாவமுள்ள மனிதர்களைக் கர்த்தர் பிரசங்கித்தல் மற்றும் போதித்தலில் கூடப் பயன்படுத்த முடியும், பிலிப்பியர் 4:13 ஐ மறந்து விடாதீர்கள். [10]"கிரேக்கன்" என்பது அநேகமாக "கிரேக்க மொழி பேசும் புறஜாதியார்" என்று அர்த்தப்படலாம்.

[11]பவுலைப் பொறுத்தமட்டில் விருத்தசேதனம் செய்தலே மாறுபட்ட ஒரு விஷயமாய் இருந்தது (கலா. 5:6; 6:15); அது இரட்சிப்புக்கான நிபந்தனை என்பதாக மனிதர்கள் மீது சுமத்தப்பட்டால் அது தவறானதாகும். விருத்தசேதனம் செய்யும் பழக்கமானது நியாயப்பிரமாணத்திற்கு முற்பட்ட காலத்திலேயே இருந்தது என்பதை மனதில் வையுங்கள் (யோவா. 7:22); மோசே நியாயப்பிரமாணத்தைக் கொடுப்பதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பாகவே இஸ்ரவேலர்களால் அப்பழக்கம்

மேற்கொள்ளப்பட்டிருந்தது. [12]பவுலின் பயணத்திற்கான அடிப்படை நோக்கமாக இது குறிப்பிடப்பட்டது. பவுல் மற்றும் சீலாவினால் போதனையின் மூலம் கொடுக்கப்பட்ட ஆறுதலினால் சபைகள் பொதுவாக "விசுவாசத்தினால் பெலப்பட்டன." மேலும் அவைகள் யூதமத போதகர்களை "கள்ள போதகர்கள்" என்று வெளிப்படுத்திய வகையில் அவைகள் "விசுவாசத்தில் பெலப்பட்டன." [13]இது ரோமாபுரி ஆளுகைக்குட்பட்ட ஒரு மாகாணமாகும். இது, ஆசியா என்று இப்போது நாம் அழைக்கும் கண்டமல்ல. [14]தொடர்ந்து நேர்ந்த சம்பவங்களில் இருந்து இதுவே அவரது அடைவிடம் என்பது தெளிவானது (18:19-21; 19:1). [15]பின்னாளில் பவுல் ஆசியாப் பகுதியில் ஊழியம் செய்தார் (அப். 19), ஆகவே இது இருபொருளற்ற "இல்லை" என்பதற்குப் பதில், "இப்பொழுது இல்லை" என்ற பதிலாகவே உள்ளது. அந்த வேளைக்கு தேவன் அக்கதவை அடைத்திருந்தார்; பின்னாளில் அவர் அதைத் திறப்பார் (1 கொரி. 16:8, 9). [16]"கனவுக்குழு" என்ற சொற்றொடரானது சமீபத்திய ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்க நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மிகத் திறமை வாய்ந்த கூடைப் பந்தாட்டக் குழுவினரைக் குறிக்க USAவில் பயன்படுத்தப்படுகின்றது.